IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS.40/2020

Deposition of Witness : PW- 1

Name : முருகன்

Father Name /W/o : சுப்பிரமணிரெட்டி

Religion : இந்து

Caste : -

Calling : -

Address : பாடி கிராமம் நெமிலி வட்டம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 15.06.2023.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி :- (1ம் பிரதிவாதி தரப்பில்)

1. வழக்கு சொத்து தற்போத யார் அனுபவத்தில் உள்ளது என்றால் எங்கள் அனுபவத்தில் உள்ளது. வழக்கு சொத்தின் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.371/3ல் 28 3/4 செண்ட் மற்றும், சர்வே எண்.371/2ல் 3/4 செண்ட். வழக்கு சொத்து எங்கள் அனுபவத்தில் உள்ளதற்கு ஆதாராம் ஏதாவத தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா மாறுதல் ஆகவில்லை ஆவணம் மட்டும் கொடுத்துள்ளேன். 1975ல் என் தந்தை கிரையம் பெற்ற பிறகு வருவாய் பதிவேடுகளில் என் தந்தை பெயர் வந்ததா என்றால் இல்லை. பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது என்றாலும் அதை ரத்து செய்வதற்கு மனு கொடுத்துள்ளேனா என்றால் ஆர்.டி.ஓ.விடம் கொடுத்துள்ளேன். அதில் என்ன உத்திரவு போடப்பட்டது என்றால் எந்த உத்திரவும் போடவில்லை அதனால் தான் நீதிமன்றத்திற்கு வந்து விட்டோம்.

2. ஆர்.டி.ஓ விசாரணையின்போது நானும் ஆஜராகினேன் என்றாலும் முறையான ஆவணம் கொடுக்காததால் 30.07.2021 அன்று என் மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு தற்போது வரை வரி செலுத்தியுள்ளோமா

என்றால் பட்டா மாறவில்லை என்பதால் செலுத்தவில்லை. வழக்கு சொத்தை என் தந்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு கிருஷ்ணன் மற்றும் அவர்களத சகோதரர்கள் கூட்டாக சேர்ந்து அவர்களின் சகோதரிகள் லட்சுமியம்மாள் மற்றும் வள்ளியம்மாள் என்பவர்களுக்கு 1970ல் தான செட்டில்மெண்ட் கொடுத்தது தெரியுமா என்றால் நாங்கள் வாங்கியபோது தெரியாது பிறகு தெரிய வந்தத அவர்கள் அந்த செட்டில்மெண்டை 1977ல் ரத்து செய்து விட்டார்கள்.

3. என் தந்தை கிரையம் பெற்ற போது சொத்தின் உரிமையாளர்கள் லட்சுமியம்மாள் மற்றும் வள்ளியம்மாள் மட்டும் தான் உரிமையாளர்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்து என் தொடர் அனுபவத்தில் இல்லை என்றாலும், வருவாய் ஆவணங்களிலும் இல்லை என்றால் என் அனுபவத்தில் தான் உள்ளது. பிரதிவாதிக்கு முழு உரிமையும் உள்ள சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளிற்கினங்க கு.வி.தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகின்றது).